பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 04 2024 7 15

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலில் முதல் மற்றும் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

2. பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி சென்னை தியாகராயநகரில் தேர்தல் பிரச்சார வாகன பேரணியில் பங்கேற்றார்.

3. காவிரி விவகாரத்தில் தமிழகத்தில் உள்ள கட்சிகளுடன் இணைந்து காங்கிரஸ் செயல்படும் என்று அக்கட்சியின் மாநில தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

4, ரமலான் பண்டிகையையொட்டி காஸாவில் உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்தி ஐ நா பாதுகாப்பு சபை நிறைவேற்றிய தீர்மானத்தை இந்தியா வரவேற்றுள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் முதல் மற்றும் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

அதிகரித்து வரும் கோடை வெப்பத்தையும் பொருட்படுத்தாமல் அரசியல் கட்சியினர் தேர்தல் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி சென்னை தியாகராயநகரில் தேர்தல் பிரச்சார வாகன பேரணியில் பங்கேற்றார்.

தேனாம்பேட்டை வரை இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு அவர் இப்பயணத்தை மேற்கொண்டார்.,

**[]<<<>>>[]**

தமிழ் மொழிக்கும், தமிழகத்திற்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கும் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு முன்னுரிமை அளித்ததாக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு பொன் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பிஜேபி வாரிசு அரசியலுக்கு எதிரான கட்சி என்று கூறினார்.

அனைத்து தரப்பு மக்களுக்கும் நலத்திட்டங்களை அளிப்பதிலும், நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதிலும் பிஜேபி முழுமூச்சுடன் செயல்பட்டு வருவதாகவும் திரு பொன் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

காவிரி விவகாரத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளுடனும் இணைந்து காங்கிரஸ் கட்சி செயல்படும் என்று அக்கட்சியின் மாநில தலைவர் திரு செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.,

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உச்சநீதிமன்றத்தின் அனுமதி இல்லாமலும், தமிழக அரசின் ஒப்புதலை பெறாமலும் கர்நாடக அரசு எந்த ஒரு அணையையும் காவிரியின் குறுக்கே கட்ட முடியாது என்று கூறினார்.

தேர்தல் நன்கொடை, தேர்தல் பத்திரம் குறித்து பிஜேபி மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்றும் திரு செல்வப்பெருந்தகை கூறினார்.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலையொட்டி ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷனில் தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு ஒலி ஒளிபரப்புக்கான தேதி மற்றும் நேரம் குலுக்கல் முறையில இன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியபிரதா சாஹூ முன்னிலையில் இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநில கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரஸார் பாரதியின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இம்மாதம் 12, 13, 15, 16 ஆகிய தேதிகளில் இந்த தேர்தல் ஒலிபரப்பு இடம்பெறும்.

கோடை பண்பலை உட்பட தமிழகத்தில் உள்ள வானொலி நிலையங்களின் அனைத்து அலைவரிசைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தேர்தல் ஒலிபரப்பு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வானொலி ஒலிபரப்பில் திமுக, அஇஅதிமுக, தேமுதிக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ், பாரதீய ஜனதாக்கட்சி, காங்கிரஸ், பகுஜன் சமாஜ் ஆகிய கட்சிகளின் ஒலிபரப்புக்கான தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமலாக்கப் பிரிவினர் இன்றும் சோதனை மேற்கொண்டனர்.

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் 25-க்கும் மேற்பட்ட இடங்களில் சட்டவிரோத பண பரிவர்த்தனை தடுப்புச் சட்டத்தின் கீழ் சோதனைகள் நடத்தப்பட்டன.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள திரு ஜாபர் சாதிக், திரைப்பட இயக்குநர் திரு அமீர் உள்ளிட்டோருக்குச் சொந்தமான இடங்களிலும் சோதனைகள் நடைபெற்றன.

திரு ஜாபர் சாதிக் இடமிருந்து கடந்த மாதம் இரண்டாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள மூவாயிரத்து 500 கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

**[]<<<>>>[]**

புத்தாண்டையும், வசந்தகாலத்தையும் வரவேற்கும் யுகாதி, குடிபட்வா, சைத்ர சுக்லாடி, சேத்திசந்த், நவ்ரே பண்டிகைகள் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டன.

ஆந்திர பிரதேசம், தெலங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா, பஞ்சாப், ஹரியானா, உள்ளிட்ட மாநிலங்களில் இந்த பண்டிகைகள் கொண்டாடப்பட்டன.

[]<<<>>>[]

உலக ஹோமியோபதி தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி புதுதில்லியில் இரண்டு நாள் ஹோமியோபதி கருத்தரங்கை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தொடங்கி வைக்கிறார்.

மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சிக் குழுமம் - ஆயூஷ் அமைச்சகத்துடன் இணைந்து நடத்தும் இக்கருத்தரங்கிற்கு ஹோமியோபதி ஆராய்ச்சியை வலுப்படுத்தி, தொழில் வாய்ப்புக்களை பெருக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் என்ற கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்துவது மற்றும் நவீன தொழில்நுட்பங்களுடன் ஹோமியோபதி ஆராய்ச்சியை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கில் இக்கருத்தரங்கு நடைபெறுகிறது.

[]<<<>>>[]

எம் ஜி ஆர் கழக நிறுவனரும், தமிழக முன்னாள் அமைச்சருமான திரு ஆர் எம் வீரப்பன் இன்று பிற்பகல் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 98.

மூத்த அரசியல்வாதியான திரு ஆர் எம் வீரப்பன், வயது மூப்பு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக சென்னை தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

எம் ஜி ஆர் மற்றும் ஜெயலலிதா ஆட்சியின்போது தமிழக அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த மூத்த அரசியல் தலைவராக அவர் திகழ்ந்தார்.

1995-ஆம் ஆண்டு எம் ஜி ஆர் கழகம் என்ற அரசியல் கட்சியை அவர் தொடங்கினார்.

அரசியல் மட்டுமன்றி தமிழ் திரைப்படத் தயாரிப்பாளராகவும் அவர் பல திரைப்படங்களை தயாரித்துள்ளார்.

பழம்பெரும் நடிகர்கள் எம் ஜி ஆர், சிவாஜிகணேசன் மற்றும் காமல்ஹாசன், ரஜினிகாந்த் உள்ளிட்டோர் நடித்த ஏராளமான திரைப்படங்கள் ஆர் எம் வீரப்பன் தயாரிப்பில் வெளிவந்துள்ளன.

முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தனியார் மருத்துவமனைக்கு நேரில் சென்று ஆர் எம் வீரப்பன் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அரசியல், திரைத்துறை, ஆன்மீகம் என பல துறைகளிலும் சாதனைப்படைத்தவர் என்றும், அரசியல் வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தரப்பினராலும் போற்றப்படும் பேராளுமையாக ஆர் எம் வீரப்பன் திகழ்ந்தார் என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், ஆர் எம் வீரப்பன், அஇஅதிமுக-வை தொடங்குவதற்கு உறுதுணையாக இருந்தார் என்றும், கட்சியின் அமைச்சராகவும், இணைப்பொதுச்செயலாளராவும பணியாற்றினார் என்றும் கூறியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ப சிதம்பரம், திராவிடர் கழகத் தலைவர் திரு கி வீரமணி, பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு, மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ, பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை, தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் உள்ளிட்டோர் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

பணியிடங்களில் பெண்களை பாலியல் தொந்தரவுகளிலிருந்து பாதுகாப்பதற்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை மாநில அரசு கண்காணிக்க வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நூற்பாலை உள்ளிட்ட பகுதிகளில் பெண்கள் பாலியல் தொந்தரவுகளுக்கு ஆளாவதாக தாக்கல் செய்யப்பட்ட மனு தலைமை நீதிபதி திரு கங்கா பூர்வாலா, நீதிபதி திரு சத்யநாராயணா பிரசாத் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

அதிகாரிகள் பாலியல் தொந்தரவிலிருந்து பெண்களைப் பாதுகாக்க கட்டாயமாக கண்காணிக்க வேண்டுமென்றும், புகார்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் குறித்த பதிவேட்டை பராமரிக்க வேண்டுமென்றும் நீதிபதிகள் உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தனர்.

[]<<<>>>[]

பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு இடையே அரசியல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி வந்துள்ள பெல்ஜியம் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் **Theodora Gentzis** -ஐ சந்தித்து பேசிய பின் திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வைரக் கற்களை பட்டைத்தீட்டும் தொழில் மற்றும் குறைக்கடத்திகள் உற்பத்தித் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமென்று தாம் வலியுறுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

ரமலான் பண்டிகையையொட்டி காஸாவில் உடனடியாக போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஐ நா பாதுகாப்பு சபை தீர்மானம் நிறைவேற்றியதை இந்தியா வரவேற்றுள்ளது.

இந்தியாவுக்கான ஐ நா-வின் நிரந்தர பிரதிநிதி திருமதி ருச்சிரா கம்போஜ் ஐ நா பொதுசபைக் கூட்டத்தில் உரையாற்றுகையில், இது ஒரு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை என்று கூறினார்.,

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நடைபெற்று வரும் போர் ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும், அங்கு வசிக்கும் மக்களுக்கு பெரும் இன்னல்களை ஏற்படுத்தி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

போரினால் நிலவும் சூழ்நிலை குறித்து இந்தியா மிகவும் வேதனை அடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த போரினால் அதிக அளவு பொதுமக்கள் குறிப்பாக பெண்களும், குழந்தைகளும் உயிரிழப்பது மிகுந்த வருத்தத்தை அளிப்பதகாவும் திருமதி ருச்சிரா தெரிவித்தார்.

கடந்த மாதம் 25-ஆம் தேதி ரமலான் பண்டிகையையொட்டி காஸாவில் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்றும், எந்த ஒரு நிபந்தனையுமின்றி அனைத்து பிணைக் கைதிகளையும் விடுவிக்க வேண்டுமென்றும் ஐ நா பாதுகாப்பு சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருந்து மற்றும் நிவாரணப் பொருட்கள் விநியோகிப்பதற்கு எவ்வித தடையும் இருக்கக்கூடாது என்றும் அந்த தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

மொகாலியில் இன்னும் சற்று நேரத்.தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டி சீனாவில் இன்று தொடங்கியது.

**Ningbo** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டங்களில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் மாளவிகா பன்சோத் வெற்றிபெற்று பிரதான சுற்றுக்கு முன்னேறினார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் அம்ஸா கருணன் - ரத்னா சபாபதி இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில் **Rutaparna Panda –** ஸ்வேதா பர்ணா பாண்டா இணையும், சிம்ரன் - ரித்திகா இணையும் பிரதான சுற்றுக்கு முன்னேறியது.

கலப்பு இரட்டையர் பிரிவில் சதிஷ் கருணாகரன் - ஆத்யா வாரியத் இணை பிரதான சுற்றுக்கு முன்னேறியது.

**[]<<<>>>[]**

ஜப்பான் பிரதமர் திரு **Femio Kishida** அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடனை, வாஷிங்டனில் இன்று சந்திக்கிறார்.

பசிபிக் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ள நிலையில், அவரது அமெரிக்க பயணம் அமைந்துள்ளது.

இந்தோ – பசிபிக் கொள்கை குறித்து இருதலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமெரிக்க செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

***End of News***